# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர் 121 18—08—1995
இதழ்: 16 விலை ரூபா 5·00



LIBRARY
18-9-1995
UNIVERSITY OF JAFFNA



**தொடர்பு சாதன ஆணைக்குழுவின்**
**அனுசரணையுடன்**
**பாதுகாவலன் எழுத்துப் பயிற்சிப் பட்டறை**

உங்கள் பங்கிலிருந்து 15 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட எழுத்துலக ஆர்வமும், ஈடுபாடும் உடைய இருபாலாரும் கலந்துகொள்ளலாம். இப்பயிற்சிக்கு பங்குத்தந்தை சிபார்சில் 2 அங்கத்தவர் கலந்து கொள்ள லாம்.

— இரண்டுநாள் பயிற்சி யாழ் நகரில் நடைபெறும் —
ஒருவருக்கான பதிவுக்கட்டணம் 50 ரூபா மட்டுமே.
விண்ணப்பங்களை 30-08-95க்கு முன் பங்குத் -தந்தைக்கு அனுப்பி வைக்கவும்.


✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

# உயிருக்கு இணையானது உலகத்தில் எதுவுமேயில்லை

★ யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

"உயிருக்கு இணையானது இந்த உலகில் எதுவுமே இல்லை. இந்தத் தேடரிய செல்வத்தை இழந்தபின் கோயில் குளம் என்ன? வீடு வாசல் என்ன? தோட்டம் துரவு என்ன?" இவ்வாறு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கடந்த புதன் 09-08-95 அன்று மாலை நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கூறினார்.

கடந்த யூலை 9ஆம் நாள் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பினால் இடம் பெயர்ந்து நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் தஞ்சமடைந்த மக்கள் மேல் பொழிந்த விமானக் குண்டு மாரியினால் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறிய யாழ் ஆயர் மேலும் தெரிவித்ததாவது!

தேவாலய சூழலில் நடந்த சகல நிகழ்வுகள் பற்றியும், இறந்த மற்றும் காயமடைந்த பொதுமக்களின் விபரங்களையும் அரசுக்கு அறிவித்திருந்த போதிலும், அரசு அவைபற்றி எதுவித கவலையும் தெரிவிக்காது, ஆலயத்தின் சேதம் பற்றி அறியத்தான் அக்கறை காட்டுகிறது. ஆனால், அன்று மடிந்த குழந்தைகள் ஒன்றும் அறியாத பாலகர்கள். இவர்களின் இழப்பை எண்ணும் போது எம் மனம் வேதனைப் படுகின்றது என்று ஆயர் வருந்தினார்.

நவாலி ஆலயப் பங்குத் தந்தை B.F. பொனிபஸ் அடிக

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## விடுதலைப்புலிகளுக்கு எதிராக அல்ல தமிழ் மக்களுக்கு எதிராகவே

அருள்திரு S.H. ஜெபநேசன்

கடந்த யூலை 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட புக்காரா விமானக் குண்டு வீச்சினால் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் அகால மரண மடைந்த அப்பாவி பொது மக்களின் ஆன்ம சாந்திக்காக அத்தேவாலயத்தில் 09-08-95 மாலை, யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற இயக்குநர் அருள்திரு S. H. ஜெபநேசன் அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி வேளையில்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### நவாலி தேவாலய சம்பவம் குறித்து ஜனாதிபதிக்கு
## யாழ் ஆயர் 07-08-95 அன்று எழுதிய 2வது கடிதம்

நவாலி தேவாலயம் மீதான விமானக்குண்டு வீச்சு சம்பவம் குறித்து நீங்கள் வெளியிட்ட கருத்து தொடர்பாக இதை நான் எழுதுகிறேன். இச்சம்பவம் குறித்து என்னிடமிருந்து "பக்ஸ்" செய்தியை நீங்கள் எதிர் பார்த்திருப்பதாக குறிப்பிட்டிருந்தீர்கள்.

இச்சம்பவம் குறித்து நான் ஜீலை 10 ஆம் திகதி எழுதிய கடிதத்தை மறுநாள் உங்களுக்கு அனுப்புவதற்காக அகதிகளுக்கான ஐ. நா. உயர்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### புலிகளை மக்களிடமிருந்து பிரிக்க முடியாது
## எம்மை சுதந்திரமாக வாழ விடுங்கள்

★ S. J. இம்மானுவேல் அடிகள்

யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் S. J. இம்மானுவேல் அடிகளார் பி. பி. ஸிக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் போர் புலிகளுக்கு எதிரானது மட்டுமே என ஜனாதிபதி கூறி வருகிறாரே உங்கள் கருத்து என்ன? எனக்கேள்வி தொடுத்த பொழுது அவர் கூறியதாவது:

"இப்படியான அறிக்கையை வெளியிடுபவருக்கு புலிகளுக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையிலான உறவுநிலை தெரியாது. விடுதலைப் புலிகள்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)


# மறையியல் கல்லூரி
## Tamil Theologate

கிறிஸ்தவ மக்களின் மறைக்கல்வியை ஆழப்படுத்தவும்
நவீனப்படுத்தவும் வசதியளிக்குமாறு
தொடங்க இருக்கும் இக்கல்லூரியில்
சேர்ந்து பயன்பெறுங்கள்.

**ஆரம்பம் : 07-10-1995**
**விண்ணப்ப முடிவு திகதி : 02-09-1995**
**கற்கை நெறி : மறையியல் டிப்ளோமா**
(வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் மட்டும்)

மேலதிக விபரம் : பங்குத்தந்தையர்
தொடர்பு : திரு. A. S. அகஸ்ரின்
பதிவாளர், மறையியல் கல்லூரி,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.


## விரைவில் சுகமடைய செபிப்போம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்திரு S. F. கிருபானந்தன் லண்டனிலுள்ள மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்டு மூன்றாம் தடவையாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அடிகளார் விரைவில் குணமடைந்து சுகநலத்துடன் வாழ செபிக்குமாறு யாழ் ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மத வழிபாட்டு உரிமையை தடைசெய்யும் முயற்சி

✻ நல்லை ஆதீன முதல்வர்

ஆலயங்களில் சரணடையும் மக்கள் மீது கொடூரத் தாக்குதல்களையும் குண்டு வீச்சுக்களையும் நிகழ்த்துவதன் மூலம் மதவழிபாட்டு உரிமைகளைத் தடைசெய்யும் முயற்சியிலும் சிறீலங்கா அரசு முனைப்புடன் இறங்கியுள்ளதாகவே கருத முடியும் என, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## நீதி-நியாயத்திற்கு போராடுபவர்கள் துன்பத்திற்குள்ளாகின்றனர்

ஆயர் S. ஜெபநேசன்

"சிக்கல் நிறைந்த இக்கால கட்டத்தில் இலங்கையரசு கிறிஸ்தவர்களைச் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கின்றது. நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் போராடுபவர்கள் துன்பத்திற்குள்ளாகின்றனர்." இவ்வாறு தென்னிந்திய திருச்சபை அத்தியட்சர் அதிவண.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கிறிஸ்தவ பேரவை கண்டனம்

இலங்கை பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க திருச்சபை பணியாளரான கெனத் முல்தர் யூலை 28இல் நாடு கடத்தப்பட்டமை சட்டத்துக்கு புறம்பான அநீதியான நடவடிக்கை என்று தேசிய கிறிஸ்தவ பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைமையகத்தில் பணிபுரிந்த திரு. கெனத் முல்தர் வவுனியாவில் வைத்து யூலை 21ஆம் திகதி கைது செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே.

## யாகப்பர் ஆலயப்பங்கில் புதுப்பித்தல் பணிகள்

குருநகர், புனித யாகப்பர் ஆலயப் பங்கில் கடந்த 25-06-95 அன்று மகா ஞான ஒடுக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட மக்கள் அனைவரும் கிறிஸ்துவின் அன்பினால் பிணைக்கப்பட்டு, அன்புச் சமூகமாக வாழவும் வளரவும் வழிகாண்பதே இம் மகா ஞான ஒடுக்கத்தின் குறிக்கோளாகும்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## தியான இல்லம் மீதும் தாக்குதல்

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் தஞ்சமடைந்த அப்பாவி மக்களில் இருவர் 10-08-95 அன்று அதன் மீது ஏவப்பட்ட எறிகணைகளால் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் இவ்வில்லத்தைப் பராமரித்து வந்த அருள் சகோதரி டிசேல்ஸ் என்பவரும் காயமடைந்ததுடன், தியான இல்லமும் சேதத்திற்குள்ளானது. தொடர்ந்தும் தியான இல்லம்மீது எறிகணைத்தாக்குகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## யாழ். பேராலயத் திருவிழா

கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ் பேராலயத் திரு

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## புன்னாலைக் கட்டுவன் புனித இராயப்பர் திருவிழா

உரும்பிராய்ப் பங்கின் கிளைப் பங்காகிய புனித இராயப்பர் திருவிழா 23-06-95 மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 02-07-95 ஞாயிறு காலை திருப்பலியின் பின் புனிதரின் ஆசியோடு விழா இனிதே நிறைவேறியது. திருநாள் திருப்பலி மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட்தந்தை S. H. ஜெபநேசன் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## வாழ்வளிக்கும் வழி

நாட்டில் இன்று மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றனர். மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்புத் தேவை.

சமூக விரோத சக்திகள் ஓங்கிவிட்டன. தீமையின் சக்தி மேலோங்கியுள்ளது. உலகரங்கில் முகமூடியணிந்து நடிப்பவர்களின் தீய மனம் ஓங்கி வளர்ந்து நிற்கின்றது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்பேற்றவர்களே சமூகச் சீர்குலைவுக்குக் காரணமாக இருக்கின்றனர். நேர்மையானவை, சரியானவை என்று மனச்சாட்சி கூறுவதைச் செய்யும் அளவுக்கு பொறுப்பாளர்களின் மனம் பக்குவப்படவில்லைப் போல் தோன்றுகிறது. தான் கூறுவது உண்மையல்ல; உண்மைக்கு முற்றிலும் மாறானது; பச்சைப் பொய் என்று தெளிவாகத் தெரிந்தும் உண்மையை ஏற்க மனமில்லாதவர்கள் வளர்ந்து வருகின்றனர். இவற்றால் மக்கள் மனத்தில் உண்டாகும் வேதனையோ... ஒரு புறமிருக்க!

என்றுமே இல்லாத விலைவாசி உயர்வு, வேலை வசதியின்மை, அத்தியாவசிய பொருள்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளுடன் இன்று வேறு சில பிரச்சனைகளும் கிளைவிட்டுள்ளன. போசாக்கின்மை, பஞ்சம், பசி, பட்டினி, நோய், பிணி ..... பதுக்கல், கொள்ளை, களவு முதலியன இவைகளில் ஒரு சில. இதனால் மக்கள் மனத்திலும் உடலிலும் உண்டாகும் பாதிப்போ ...... மறுபுறமிருக்க!!

போரினால் உண்டாகும் பயங்கர விளைவுகள் பற்றிப்பேசவும் வேண்டுமா? உயிர், உடல், உடமை, சொந்தம், பந்தம், சொத்து அனைத்தையும் இழந்து வாடும் மனங்களின் நிலைதான் என்ன?!

இவை அனைத்துக்கும் மத்தியிலும் மனிதன் வாழ வேண்டியவனாகின்றான். ''இதுதான் வாழ்க்கை'' என்று வரையறுத்துக் கூற முயன்றவர்கள் பலர். ஒவ்வொருவரும் வாழ்க்கையைப் புரிந்துகொண்ட விதங்கள் பலப்பல. வாழ்க்கையின் முக்கிய தன்மையை முற்றும் உணர்ந்தவர் மிக மிகச் சிலரே!

வாழ்க்கையெனும் ஆழ்கடலில் பிரயாணம் செய்யும்போது ஆர்ப்பரிக்கும் அலைகள், பயங்கரப் புயல்கள், சூறாவளிகள் நம்மைத் தாக்குகின்றன, அலைக்கழிக்கின்றன. சிலர் மூழ்கடிக்கப்பட்டு தோல்வியடைகின்றனர். இவற்றையெல்லாம் மேற்கொண்டு வாழ்க்கைப் பயணத்தை வெற்றிகரமாக முடிக்கும் வீரர்கள் சிலரும் உளர்.

சிக்கலான, கடுமையான இக்கடல்வழிப் பயணத்தில் நம்மைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல பலம் வாய்ந்த, ஞானம் நிறைந்த கப்பலோட்டிகள் தேவைப்படுகின்றனர். இவர்களைச் சரியான திசையில் நடத்த துல்லியமாகப் பிரகாசிக்கும் துருவ நட்சத்திரம் ஒன்று துணை நிற்கும் போது பயணம் எவ்வளவோ எளிதாக அமையும்!

வாழ்க்கைப் பயணத்தில் கரை சேர வேண்டுமாயின் நல்லதோர் நட்சத்திரம் இருந்தாலும், ஆற்றல் மிகு ஓட்டிகள் இருந்தாலும், கொந்தளிக்கும் கடலில் பிரயாணம் செய்யும் மரக்கலத்திலுள்ள மக்கள் மனந் தளராது நம்பிக்கையுடன் மன அமைதி பேணுவது இன்றியமையாததாகும்.

துன்பத்தில் மகிமை இருக்கின்றதே என்று மகிழ்வது ஒரு வீரனின் கண்ணோட்டம். துன்பம் இருக்கின்றதே என்று எண்ணித் துவளுவது ஒரு கோழையின் திண்டாட்டம்.

நடப்பது எல்லாமே, இறைவனின் திட்டத்தில், நமது நன்மைக்காகவே நடக்கின்றன. எது நடப்பினும் இறுதியில் வெற்றி நமதே! இத்தகைய மனப்பான்மையுடன் நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்க வேண்டும்.

துன்பத்திலும் இன்பத்திலும், வெற்றியிலும் தோல்வியிலும், தாழ்விலும் உயர்விலும், சாவிலும் பிறப்பிலும், நோயிலும் உடல் நலத்திலும் தளம்பாத தளராத மனநிலையுடன் இருந்தால்தான் வாழ்வின் இலக்கை அடைய முடியும். அன்றாட வாழ்வில் ஏற்படும் இடர்கள், இன்னல்கள், துன்ப துயரங்கள் அனைத்தையும் 'மீட்பளிக்கும் சிலுவை' என்று ஏற்றுக்கொள்ளும் மனநிலை வேண்டும்.

சிலுவை இல்லாமல் சிம்மாசனம் இல்லை. பொன் முடி அணிய விரும்பும் ஒவ்வொருவரும் முதலில் முள் முடி அணியத் தயாராகவேண்டும்.

திருமறை அளித்த தேவன் உலகில் மனிதனாகப் பிறந்து, வாழ்ந்து காட்டிய வழி இதுவே. இது மிகச் சிறந்தது தான் — என்றாலும் சிரமமானது. இதுவே ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வளிக்கும் வழி.

# இளைஞர்களே! யுவதிகளே!
# இதோ உங்களுக்காக ஓர் ஆணைக்குழு



கடந்த வருடம் நடைபெற்ற எமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டினால் விளைந்த பல்வேறு சிறப்பு அம்சங்களில் ஒன்றுதான் இளைஞர் யுவதிகளுக்கென்று பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்ட ஆணைக்குழுவாகும்.

**சிறப்பான நோக்கங்கள்**

* இளம் சமுதாயத்தினரின் தலைமைத்துவ பண்புகளை வளர்த்து கிறீஸ்தவ உருவாக்கம் அளிப்பது,
* இளைஞர் மன்றங்களை உருவாக்கி ஒருங்கிணைந்து ஊக்குவித்து, பக்கபலமாக நின்று பணிபுரிவது,
* கத்தோலிக்க இளைஞர்களூடாக எல்லா இளைஞர்களையும் சென்றடையக் கூடிய வகையில் இளைஞர் செயற்பாடுகளை ஊக்குவிப்பது,
* பங்குமட்டத்தில், மறைமாவட்டத்தில், தேசியரீதியில் திருச்சபையின் வாழ்விலும் செயல்களிலும் இளைஞரின் பங்களிப்பை பெருகச் செய்வது'
* இறை அரசின் வளர்ச்சியில் தமது பங்கு எதுவென்பதை இளைஞர்கள் உணர்ந்து செயற்பட சந்தர்ப்பங்களை உருவாக்குவது.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்ற மூன்று உபகுழுக்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன.

**மூன்று உபகுழுக்களின் குறிக்கோள்**

1. பங்குகளில் இயங்குகின்ற இளைஞர் மன்றங்களை தரிசித்தல் புதிய மன்றங்களை உருவாக்குதல்.
2. இளைஞர்களுக்கு கருத்தரங்குகளையும், மறைமாவட்ட மட்ட ஒன்று கூடல்களையும் ஒழுங்கு செய்தல்.
3. இளைஞர்களுக்கு ஆன்மீக உருவாக்கம் அளித்தல். பிரத்தியேக இளைஞர் வழிபாடுகளை ஒழுங்கு செய்தல்.

**அன்பும் துடிப்பும் பொங்கி நிற்கும் இளைஞர்களே! யுவதிகளே!**

இந்த ஆணைக்குழு முற்றிலும் உங்களுக்காகவே. உங்கள் தேவைகள் எதுவானாலும் உடனடியாக எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள், பங்குத் தந்தையரின் பராமரிப்பில் உள்ள மன்றங்கள் பங்குத் தந்தையருடாகவும், ஏனைய இளைஞர் மன்றங்கள், தனி நபர்கள் நேரடியாகவும் தொடர்புகொள்ளலாம். உங்கள்மன்றங்களையும் செயற்பாடுகளையும் 'பாதுகாவலன்' ஊடாக அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தொடர்பு :

அருள்திரு P. J.ஜெபரட்ணம்
இயக்குனர்,
இளைஞர் ஆணைக்குழு,
த. பெ. 2, ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## ✯ மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 35. "தூங்குகிறவனைத் தட்டி எழுப்பலாம்..."

1. 'தூங்குபவனைத் தட்டி எழுப்பலாம்; ஆனால் தூங்குவது போல பாசாங்கு செய்பவனைத் தட்டியும் எழுப்ப முடியாது' என்பது அனுபவமொழி.

   தனிமனித — குடும்ப அனுபவங்களிலிருந்து — உலகுதழுவிய நாடுகளிடையிலான உறவுவரை இந்த அனுபவம் இன்றுவரை அடிக்கடி உணரப்படும்.

   பல்வேறு சமூக — அறிவியல்களின் வளர்ச்சியின் பின்னாலும், மனித உறக்கமும் — பாசாங்கு உறக்கமும் கலைவதாயில்லை.

2. முன்னைய காலத்து உறக்கம், பெரும்பாலும் அறியாமையின் வசப்பட்டதாயிருந்தது. அறிவின் வழி விழிப்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்று அறிவறிந்தவரிடத்தும் உறக்கம் கலையா நிலைமைகளைக் காணமுடிகிறது,

   இந்நிலையில் சமூக விழிப்புணர்வு பணியில் ஈடுபடுபவர் பணி மிக மிகக் கடினமாகின்றது.

3 தனிமனித முரண்பாடுகளுக்கான காரணங்கள் தெரிந்த பின்னரும் முரண்பாடுகளை வளர்க்கும் நிலைமைகள் நீளுகின்றன. சமூக — தேச உறவுகளில் மனித உரிமைகள் என்றும் — சமூக நீதி — விடுதலை மகத்துவம் என்றும் உலக அரங்கில் பிரகடனங்கள் — ஒப்பந்தங்கள் — சாசனங்கள் என எழுதிய நாடுகளே வசதிக்கு ஏற்றபடி விழிப்புக் காட்டுவதும், பாசாங்கு உறக்கம் கொள்ளுவதுமான நிலைமைகள் மாறாதவரை இந்த உலகில் மனிதகுலம் மேம்பட வாய்ப்பில்லை என்பது மிகையான ஒன்றல்ல —

4. தூங்குபவர்களைத் தட்டி எழுப்பும்சமூகவிழிப்பூட்டும் பணியில் உள்ளவர்களின் முதற் பணி, இந்த பாசாங்கு உறக்கக்காரர்களை இனங்கண்டு கொள்வதும், அவர்தம் போலி நிலைமைகளை உணர்த்துதற்கான வழிகளைக் காண்பதுதான்.

   இந்த வழிவகைகளைக் காண்பதற்கான அறிவு மட்டுமல்ல, துணிவுகூட இன்றைய சமூகப்பணியாளர்களுக்கு அவசியமாகின்றது.

(பார்க்க பக்கம் 6)

## மரியாளின் மோட்ச ஆரோபணம்

தொகுப்பு: ம. மரியராஜன்

1950ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் 12ஆம் பத்திநாதர், ஆயர்கள், கருதினால்மார், குருக்கள் புடைசூழ்ந்து நிற்க கன்னிமரியாள் ஆன்ம சரீரத்துடன் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்ற விசுவாச சத்தியத்தை பிரகடனஞ் செய்தார்.

''பிரதாபம் நிறைந்த இராக்கினி இன்று பரலோகத்துக்கு ஆரோபணமாகி விண்ணுலக வாசிகளின் வரப்பிரசாதங்களைச் சந்தேகமறப் பெருக்கிக் குவித்துவிட்டாள். கிறிஸ்துவின் பிறப்பையும், மரியாளின் ஆரோபணத்தையும் யார்தான் விபரிக்கக் கூடும். எங்ஙனம் மனுமக்களுள் அதி உன்னதமாய் எவ்வளவோ மேலாக மரியாள் இவ்வுலகில் வரப்பிரசாதங்களால் நிரப்பப்பெற்றாளோ அங்ஙனமே தனக்கே உரித்தான மகிமைப் பிரதாபத்தைப் பரலோகத்திலும் பெற்றுக் கொண்டாள்.''

● ''புனித பேர்னாட்''

''சமாதானம் என்று
நான் பேசியபோது,
அவர்கள் போருக்கு
[illegible]''
[illegible]

''பொய் அகன்று எழுந்த தெய்வப்பூரண ஓகையாளே!
ஐ அகன்று உவப்பில் நாதன் அணிந்து வாழ் நெஞ்சத்தாளே
வையகம் வைகும் வாய்ந்த மாதருள் எண்ணில் ஆசி
துய் அகம் பொலியப் பூத்த சுந்தரி! வாழி''

''வீரமாமுனிவர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் அரங்கம் 6

## அயலான் யார்?

★ செல்வி. M. M. அல்பிறற்
ஆசிரியர், சென் ஜோசப் வித்தியாலயம்.

மனிதன் நாகரீக வாழ்க்கைக்கு என்று பழக்கப்பட்டானோ அன்றிலிருந்து அவன் சமூகமாக வாழப் பழகிக் கொண்டான். தன் இன்ப துன்பங்களை மட்டுமன்றி வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளையும் ஏனையவர்களோடு பகிர்ந்து வாழத் தலைப்பட்டு விட்டான். மனிதன் தனித்து வாழமுடியாதவன் என்ற பதம் நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட உண்மை. எனவே அவனுக்கு அயலவன் தேவை, அயல் தேவை. இந்த அயலான் என்றால் யார் என்பதுதான் அன்று மறைநூலறிஞரையும், இன்று எம்மையும் உலுக்கும், சிந்திக்கத் தூண்டும் கேள்வி.

அன்றைய மறைநூலறிஞரின் கேள்விக்கு மிக உறுதியான பதிலைக் கிறிஸ்து கொடுத்தார். "நல்ல சமாரித்தன்" உவமை மூலம். கேள்வியைக் கேட்டவர்கள் வாயடைத்து நின்றனர். ஆனால் இன்றும் எம்மில் பலர் நம் அயலான் என்றால் யார் என்று தெரியாமல் தட்டுத்தடுமாறித் தவறான விளக்கங்களால் தடுக்கி விழுகின்றோம். இவ்வுலகின் தீர்மானத்தின்படி எம் இருப்பிடத்தைச் சுற்றி வாழ்வோரையே நாம் நம் அயலார் என்கிறோம். அது தப்பில்லை. ஏனெனில் எமக்கு அயலிலுள்ளவர்கள் நம் அயலார்.

கிறிஸ்தவ மதிப்பீட்டினடிப்படையில் நாம் உற்று நோக்கினால் என்னுடைய உதவி யாருக்குத் தேவையோ தன்னுடைய வாழ்க்கைக்கு எவன் என்னை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றானோ அவனே என் அயலான், அவன் யாராயும் இருக்கலாம், வாழ்க்கையில் எப்பவுமே கண்டிராத ஒருவனாயிருக்கலாம். அவன் தன்னுடைய தேவைக்காக என்னை எதிர்நோக்கினால் அந்த நேரத்தில் அவன் தான் என் அயலான். என் அயலானை நான் வீதியில், பயணத்தில், பாடசாலையில் என்று, வாழ்க்கையில் எந்தெந்த இடங்களைச் சந்திக்கின்றோமோ அந்தந்த இடங்களிலெல்லாம் காணலாம்.

இன்றைய காலகட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்மைத் தட்டிக்கேட்க வேண்டியவர்களாயுள்ளோம். எதை என்று நினைக்கின்றீர்களா? யுத்தத்தின் தாக்கத்தால் அனைத்தையும் இழந்து அகதிகளாக ஓடி வந்தார்களே இலட்சக்கணக்கான மக்கள் அவர்கள் யார்? இன்றைய சூழலில் அவர்களும் எம் அயலவர். அவர்களுடைய துன்ப வேளையில் அவர்களுக்காக நாம் செய்த சேவை என்ன? மாற்றி உடுக்க ஒரு உடைதானும் எம்மை வருத்திக் கொடுத்தோமா? ஆறுதல் வார்த்தை கூறினோமா? துன்பத்தில் துவளும் மனிதனைத் தேற்றுவோராக மாறவேண்டியவன் கிறிஸ்தவன். அவன் வெறும் பார்வையாளனாக நின்றால் எங்ஙனம் கிறிஸ்தவனாக முடியும்?

வாழ்க்கையில் நாம் எவ்வளவு அனர்த்தங்களைச் சந்திக்க நேர்ந்தாலும், கிறிஸ்தவ மதிப்பீட்டினடிப்படையை விட்டு இவ்வுலகமதிப்பீட்டிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இந்நிலை மாறவேண்டும். என் அயலில் எவன் பணத்தால், வாய்வல்லமையால், அந்தஸ்தால் உயர்ந்து காணப்படுகின்றானே அவனை நாம் பெருமையோடு எம் அயலான் என்று கூறித் தரையிலிருந்து தலைக்குமேல் உயர்த்துகிறோம். எவனை உயர்த்தினோமோ அவனால் நாம் படுகுழிக்குத் தள்ளப்படும் போதுதான் உண்மை நிலையை உணர்ந்து தெளிவு பெற முயற்சிக்கின்றோம்.

கிறிஸ்தவம் என்பது வாழ்வின் வழிகளைத் தெளிவாகக் காட்டி நிற்கும் கண்ணாடி போன்றது. மனிதன் தன் ஒவ்வொரு நிலையிலும் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் புடமிட்டுக் காட்டுகின்றது. வகுக்கப்பட்ட தெளிவான வாழ்வின் வழியைப் பின்பற்றி கிறிஸ்தவ மதிப்பீட்டினடிப்படையில் உண்மைகளை உணர்ந்து உய்த்து வாழ முயற்சிப்போம். அயலவனை இனங்கண்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முனைவோம்.

## ஆன்மாவுக்கு ஒரு டானிக்

★ செல்வி லூசியா சூசைப்பிள்ளை, யாழ்ப்பணம்

நமது உடலைப் பேணி வளர்க்க உணவு எவ்வாறு அத்தியாவசியமாகின்றதோ, அவ்வாறே நமது ஆன்மாவை வளர்க்க நற்கருணை இன்றியமையாததாகின்றது. இதனாலேயே நாம் நற்கருணையை ஆன்ம உணவு என்கின்றோம். நாம் உணவு உண்ணாவிட்டால் உடல் சோர்ந்து போகின்றது. இந்நிலை தொடரும்போது உடல் நலிவுற்று, பலம் குன்றி நோய்வாய்ப்படுகின்றோம். அவ்வாறே நாம் நற்கருணை அருந்தாத நாளிலே எம்மில் [illegible] இழந்து விட்ட உணர்வு [illegible] படுகின்றது. இந்நிலை நீடிக்கும் போது. நாளடைவில் பாவம் என்ற இருளிலே எமது ஆன்மா விழ ஏதுவாகின்றது.

ஆனால் நாம் தகுந்த ஆயத்தோடு தினந்தோறும் நற்கருணை அருந்தி வருகையில் எம்மில் புத்துணர்வு, மகிழ்ச்சி, [illegible]

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

மணிக்கதை

## "கடமை"

"தம்பி எழும்படா ஆறு மணியாச்சு" என்று பேரனை எழுப்பினாள் அன்னம்மா. "ஏனம்மா? நீ பூசைக்குப் போறதெண்டால் போறதிற்கு அவனை ஏன் எழுப்புகின்றாய்?" என்று மேரி கூறி முடிப்பதற்குள் "ஞாயிற்றுக்கிழமைதானும் பூசைக்குப் போறதில்லையா?" என காரமாக ஒலித்தது அன்னம்மாவின் குரல். "அவன் இப்ப ரியூசனுக்குப்போக வேணும்" தாய்க்குப் பதில் கூறிய மேரி மகனை எழுப்பினாள். "என்னம்மா" எனச் சிணுங்கியபடி சுரேஸ் எழும்பினான்.

பிள்ளைமேரி இன்றைக்கு மூன்று மணிக்கு இளைஞர்களுக்கு கருத்தரங்கு நடைபெறும் என்று போன கிழமை முழுவதும் பங்குச் சுவாமி கூறினார், அதுக்கெண்டாலும், அவனைப் போகச் சொல்லு" என்றார் மேரியின் தந்தை. "இதுக்கெல்லாம் போய் என்ன வரப்போகுது. சும்மா நேரத்தைப் போக்காட்டுறதுதான் மிச்சம், அவன் என்ன சுவாமியாகவா போகப் போறான்? அவனுக்கு மூன்று மணிக்கு கணிதப்பாடத்திற்கு ரியூசனுக்குப்போக வேணும்" என்றாள் மேரி.

கி. கிறிஸ்தோப்பர்
யாழ். / புனித சாள்ஸ்
மகாவித்தியாலயம்.

"உங்களை நாள் தவறாமல் பூசைக்கு அழைத்துச் சென்று எப்படி வளர்த்தோம். நாங்கள். ஆனால்! நீங்க உங்கள் பிள்ளைகளை அப்படி வளர்க்கிறீர்கள் இல்லையே" என ஆதங்கத்தோடு கூறினார் தந்தை.

"காலம் மாறிப் போச்சப்பா. காலத்திற்கேற்ப நாமும் நடக்க வேணும். பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமையை நாம் செய்ய வேண்டும்" என்றாள் மேரி. 'காலம் எங்க மாறிப்போச்சு. நீங்கதான் உங்க கடமைகளை மறந்திட்டிங்களோ! என்ற தாயின் குரலிற்கு காது கொடுக்காதவளாக மகனை ரியூசனுக்கு அனுப்புவதில் முனைந்தாள் மேரி.

இரவு வழமை போல் மேரி நற்செய்தி நூலை எடுத்துத் திறந்தாள். திறந்த பக்கத்தில் வரியிட்டிருந்த பகுதியை வாசிக்கலானாள். "ஒருவன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து போனால் அதனால் பயன் என்ன?" என்ற கிறிஸ்துவின் வார்த்தை அவள் இதயத்தை ஊடுருவியது. தனது பெற்றோர் தன்னை ஆன்மீக வாழ்வில் எப்படி வளர்த்தனர் என்பதனை நோக்கும்போது தன்னைப் போன்ற பெற்றோர் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வில் எவ்வளவு பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்ளுகின்றோம் என்ற உண்மைநிலை அவள் உள்ளத்தில் எழுந்து பெற்றோரின் கடமையை உணர்த்தியது.

## மசனெட் ஆண்டு

அமதிகள் அமுதகம்

அன்பர்களே,

தொடர்ந்து உங்களை அமதிகள் அமுதத்தில் சந்திப்பதில் மகிழ்கின்றேன்.

கடந்த இதழில் உயர்குடி பிறப்பால் இயூஜினின் தந்தைக்கு ஏற்பட்ட நிலையை அறிந்திருப்பீர்கள். அந்நிலையிலிருந்து தப்ப அவர் எந்த முடிவை எடுத்திருப்பார் என அறிய ஆவலாய் இருப்பீர்கள்.

இதோ இவ்விதழில் இயேசுவிடம் சரணடைந்த இளைய பிரபு. சுவைத்து மகிழுங்கள்.

அ. பி. லொசிங்ரன் அ. ம. தி.

## 3 | புரட்சிப் புயல்!

வரலாற்று ஆசிரியர்கள் அக்குவேறு ஆணிவேறாக அலசி எடுத்த புரட்சி பிரெஞ்சுப் புரட்சி.

பணத்தில் குளித்து செல்வத்தில் மிதந்த அதிகார வர்க்கத்தை அடியோடு புரட்டிவிட்ட புரட்சி.

புரட்சி புயல் வீசத்தொடங்கியபோது அறிவும் திறமைகளும் நிறைந்த இயூஜீனின் தந்தையிடம் அரசியல் உணர்வு குறைவாகவே இருந்ததினால் புரட்சியின் போக்கைப் புரியாது இருந்துவிட்டார்.

புரட்சியின் வேகம் கூடியது.

பெரிய பிரபு 1790 டிசம்பர் குளிரில் இரவோடு இரவாக வேட்டைக்காரன் வேடம் பூண்டு ஊரை விட்டு ஓடினார்.

எட்டுவயதுச் சிறுவன் புரட்சியின் யதார்த்தத்தை நேரில் கண்டார். பிரபுக்களைப் பலியெடுத்த புரட்சி சின்னப் பிரபுக்களையும் பலியெடுக்கப் போகிறது என்ற செய்தியால் சின்னப்பிரபு பிறந்த வீட்டைவிட்டு

சொகுசான வாழ்வை விட்டு,
சொந்த பந்தங்களை விட்டு,
தாய்நாட்டை விட்டு,

தந்தையுடன் முன்னொருநாள் சேரிப் பிரபுவாக இருப்பேன் என்றவர் ஏழைப் பிரபுவாக இத்தாலிக்கு ஓடினார்.

புரட்சி பிரபுக்களை ஓர் இடத்தில் இருக்க விட்டதா!

எட்டு வயதுப் பிள்ளையின் இதயம் பட்ட வேதனைகளை எங்கள் இதயங்கள் இலகுவில் இனங் காணுமல்லவா!

## ஏணிப்படிகள்

★ D. E. ரட்ணராஜ்
இளவாலை.

நாம் எதிர் பார்த்தபடி யாவும் நடந்து விடுவதில்லை. அப்படி நடந்தால் நாங்கள் தெய்வத் தன்மை உடையவர்களன்றோ! எனவே எதிர் பார்ப்புகள் எம் முயற்சியின் பலனாக ஒரு முன்னேற்றத்தைத் தந்தாலும் அதிலே மகிழ்ச்சி கொள்ளுங்கள். நான் நினைத்தது என்னவோ! நடந்தது என்னவோ! என்ற வார்த்தைகள் அர்த்தமற்றவை, நீ நினைத்தவை நடத்துவதற்கு உன் முயற்சி எவ்வளவு செலவழிக்கப் பட்டுள்ளது. அதன் விளைவு சொற்பமேனும் உண்டா என்னும்போது எதிர் பார்ப்புகள் ஏமாற்றங்களாக வல்ல, ஏணிப் படிகளாகவே தோன்றும்.

## மத வழிபாட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவாலி புனித பேதுருவானவர் ஆலய முன்றலில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது கூறினார்.

சிறீலங்கா அரசு உண்மையாகவே சமாதானத்தை விரும்புகிறது என்றால், எதிர்காலத்தில் நவாலிக் குண்டு வீச்சுப் போன்ற சம்பவங்கள் நடக்காதிருக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் சுவாமிகள் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியின்பால் பசிதாகம் உள்ளோர்



# பேறு பெற்றோர்

## நீதியின் பயணம்

★ அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

மத்தேயு நற்செய்தியின்
மலைப் பொழிவின்
நான்காம் பொழிவு
"நீதியின் பால்
பசிதாகமுள்ளோர்
பேறுபெற்றோர்."
எளிய மனத்தோர்...,
துயருறுவோர்..,
சாந்தமுள்ளோர்...,
இவை மத்தேயுவின்
முதல் மூன்று ஆசீர்கள்.
இவை ஒரே தன்மையானவை.
இவை இறையரசின்
இறைமக்களிடம்
இருக்கவேண்டிய
அடிப்படை மன நிலையைக்
குறிக்கின்றன.
இனிவரும் ஐந்தும்
அவ்வடிப்படையில்
கட்டி எழுப்பப்படும்
கட்டிடம் போன்றன.
எளிய மனத்தோர்
துயருறுவோர்
சாந்தமுள்ளோர்
இவர்கள் தான்
நீதியின் பால்
பசி தாகம் உள்ளவர்களாய்
நீதிக்காய் குரல்
கொடுக்கக் கூடியவர்கள்.
இந்த முதல் மூன்று நிலையை
தமதாக்குவோர் தான்
இனிவரும் பேறுகளையும்
அதற்கான செயல்களையும்
செய்யத் துணிவர்.
அதற்காகப் போராடுவர்.
பசியும் தாகமும்
மனிதனின்
அடிப்படைத் தேவைகள்.
பசிக்கு உணவு தான் மருந்து
தாகத்திற்கு நீர்தான் மருந்து.
பசியும் தாகமும் – எம்
பலமும் பலவீனமுமாகிறது.
பசியையும் தாகத்தையும்
தீர்க்கும்போது – பலம்.
தீர்க்காதபோது – பலவீனம்.
இது தான் எம் வாழ்வு.
சிலரின் அநியாய ஆசையால்
பலரின் நியாய ஆசைகள்
அடியோடு அழிக்கப்படுகிறது.
சிலரின் "ஆடம்பரத்"திற்காக
பலரின் "அடிப்படை".
சிலரின் "உல்லாசத்"திற்காக
பலரின் "உரிமை".
சிலரின் "அநியாயத்திற்"காக
பலரின் "நியாயம்".
சிலரின் "சுகத்திற்"காக
பலரின் "சுதந்திரம்".
அழிக்கப்படுவது சரியா?
எம் நீதியின் பயணம்
நீண்ட பயணம்.
கடின பயணம்.
நீதியின் பால் பசிதாகம்
உள்ளோர் தான்
இப்பயணத்தில்
இணைய முடியும்.

## நிழலும் நிஜமும்

தொகுப்பு:
அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

பருந்துகளை நம் பிரதேசத்தில் அதிகம் காண்கிறோம். பருந்து கோழிக் குஞ்சுகளைத் தூக்காமல் காவல் காத்த அனுபவங்கள் பல. இன்றும் நம் சிறார்களுக்கு பருந்து உயரப் பறக்கும் என்று படித்துக் கொடுக்கிறோம்.

பருந்து தன் குஞ்சுகளை எப்படி இனம் காண்கிறது தெரியுமா?

பருந்து தன் குஞ்சுகளோடு வேறு குஞ்சுகளும் சேர்ந்து விட்டனவா? பருந்து இனத்திற்கே உரிய துணிவைத் தன் குஞ்சுகள் வைத்திருக்கின்றனவா என்ற சோதனையில் தான் இனம் காண்கின்றன.

தன் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு உயரே பறக்கும் பருந்து சூரியனை நோக்கி நேரே பார்க்கும்படி சொல்லுமாம். பளிச்சிடும் சூரிய ஒளியை உற்றுப் பார்க்கும் குஞ்சுகள் தன்னுடையன என்று தெளிவாகத் தெரிந்துகொள்ளும். உற்றுப் பார்க்க துணிவில்லாது கண்களை மூடிக்கொள்ளும் குஞ்சுகளைத் தொப் என கீழே போட்டு விடும்.

நீதி சூரியனை நோக்கி நெருங்கி வருவது போன்றது. ஒளியை உற்றுப் பார்க்கவும், வெப்பத்தை தாங்கிக் கொள்ளவும் துணிவுடையவர்தான் நீதிக்காக உழைக்க முடியும்.

★ ★ ★

வெப்பத்தைத் தாங்குவது, துன்பத்தை ஏற்பது, நீதிக்கு குரல் கொடுப்பது, அநியாயத்தை அழிக்க முற்படுவது இவை அனைத்துமே பருந்து சூரியனை உற்று நோக்குவது போன்றது.

நீதியின்பால் பசிதாகம் உள்ளவர்களாக மாறுவோமா...???

★ ★ ★

மனிதன் இருக்கும் வரை சொத்து தேடலும், சொத்து அபகரித்தலும் இருக்கும், மனிதனின் சீவியம் முழுவதும் சொத்துச் சேர்ப்பதிலே தொடங்கி சொத்துச் சேர்ப்பதிலே முடிந்துவிடும்.

இறுதியில் சேர்த்த சொத்து தன்னால் எடுத்துச்செல்ல முடியாது என்ற நிலையிலேயே விடப்படுகிறது.

சிறு கொள்ளைக் கப்பல் அலெக்ஸாண்டர் மன்னனிடம் சிக்கியது. கொள்ளைக் கப்பல் தலைவன் பொருளை கள்ளமாக அபகரித்த குற்றத்திற்காக மரணதண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டான்.

கப்பல்தலைவன் மன்னனைப் பார்த்து "நான் சிறிய கப்பலில் கொள்ளை இடுகிறேன். நீயோ பெரிய கப்பலில் கொள்ளை இடுகிறாய். உன் மனச்சான்றைத் தட்டிப்பார். நான் மட்டும் தண்டிக்கப்படுவது சரியா?" என்று கேட்டான்.

மன்னன் அவனை விடுதலை செய்தான். நீதி என்பது எல்லோர்க்கும் சமமானது. நீதியின் பால் பசிதாக முள்ளோர் சமமான நீதிக்கே உழைப்பர்.

★ ★ ★

## பேறுபெற்றோர்........?

இதயம் இழந்து — மாற்றான்
இடத்தைப் பிடித்து — அங்கு
கெடுபிடிகள் நடத்தி — அவன்
உயிரைக் குடிப்போர் — இங்கு
பேறு பெற்றோரா............?
பாசம் துறந்து — தன்
தேசம் மறந்து — பின்
தாரம் பறந்து — பிற
தேசம் செல்வோர் — இங்கு
பேறு பெற்றோரா ............?
உட்மை இழந்து — கையில்
உயிரைப்பிடித்து — பின்னர்
குண்டு துளைத்தும்
குண்டு வெடித்தும் — தம்
உயிரைப் பறி கொடுத்தோர் — இங்கு
பேறு பெற்றோரா............?
தாகமுடையோர் — அவர்
பசியுடையோர் — பலர்
எதன் பால்............?
நீரோடு உணவின்பால்............
கூட, உண்மை நீதியின் பால்............
ஏனெனில், பேறுடையோர் — அவர்
நீதியின் பால் பசிதாகமுள்ளோர்............

★ வே. றவிறாஜ்

## "நீதியின்பால் பசிதாகம் உள்ளோர் பேறுபெற்றோர்"

### ஒரு விவிலியக் கண்ணோட்டம்

யேசுவின் "மலைப் பொழிவை" மத்தேயுவும் லூக்காசும் மட்டும் தருகிறார்கள். மத்தேயு இதனை மழைப்பொழிவு என அழைக்க லூக்காஸ் இதனை சமதளப் பொழிவு என்கிறார்.

மத்தேயு 8(9) பேறுகளை 109 வசனங்களில் தர லூக்காஸ் 4 பேறுகளை 30 வசனங்களில் தருகிறார். இந்த 30இல் 24 வசனங்கள் ஒத்த வசனங்கள். அப்படியாயின் மத்தேயுவும், லூக்காவும் ஒரே இடத்தில் இருந்து இவற்றைப் பெற்றுள்ளனர்.

"இப்போது பசியாய் இருப்பவர்களே நீங்கள் பேறுபெற்றவர்கள், ஏனெனில் நிறைவு பெறுவீர்கள்" (லூக். 6 : 2)- இது லூக்காசின் அறைகூவல்.

நீதியின் பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" (மத். 5 : 6) – இது மத்தேயுவின் பொழிவு.

லூக்காஸ் பசியாய் உள்ளவர்களே என்று அழைக்க– மத்தேயு பசி தாகம் உள்ளவர்களே என்று அழைக்கிறார்.

பசியுடன் தாகம் சேரும் போது அளவிடமுடியாத, அதே நேரத்தில் ஆழமான தேவை உணரப்படுகின்றது.

பசியும், தாகமும் எப்படி முக்கியமோ அப்படியே நீதியின் பால் பசியும் தாகமும் முக்கியமாகின்றது.

பசியையும், தாகத்தையும் குறிப்பாக இங்கு இயேசு குறிப்பிடக் காரணம் என்ன என்ற ஓர் கேள்வி எழலாம்.

இதன்பின்புலம்என்ன? பலஸ்தீனாநாடு வறுமைமிக்கநாடு. ஒரு நேர உணவிற்காய் கடினமாய் உழைப்போர் ஏராளம் பேர். அதைப் பெறாமலே நாளை முடித்துக்கொள்வோர் அனேகர்.

குடிநீர் அவர்களுக்கு உணவை விடக் கடினமானது. நீண்டதூரம் தேடி அலைந்து அவர்கள் நீரைப் பெற வேண்டும்.

நீர் தேடி எடுப்பதோடே அவர்களின் ஒரு நாளுக்குரிய வேலை முடிவதும் உண்டு.

சுருக்கமாகச் சொன்னால் அன்றாட பலஸ்தீன வாழ்க்கை பசிக்கும் தாகத்திற்கும் இடையிலான போராட்டமே.

இவர்களுக்கு இயேசு கொடுக்கும் போதனை மிகவும் தெளிவானது.

எவ்வாறு நீங்கள் பசிக்கும், தாகத்திற்கும் ஆவலாக உள்ளீர்களோ அதே போல் நீதிக்கும் ஆர்வமாக இருங்கள்.

## புன்னாலைக் கட்டுவன் புனித இராயப்பர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் கத்தோலிக்கர் மிகவும் குறைவாகவே உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன் இக் கிராமத்தில் ஊடுருவிய பிற சபையினரால் கத்தோலிக்கரும் அச் சபையை நாடிச் செல்ல நேரிட்டது. பிற சமய ஊடுருவல் மத்தியிலும் எமது பங்குத் தந்தை J. B. அன்ரனி அடிகளாரும், ஆலய நற்செய்திப் பணியாளரும் இணைந்து அப்பகுதி இல்லங்களுக்குச் சென்று அவர்களோடு உரையாடி, இவ்வருடம் திருநாள் திருப்பலிக்கு அவர்களையும் அழைத்தனர், அவர்கள் தொடர்ந்தும் இறைவனை மகிமைப்படுத்தி திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்கு எமது ஞானத் தந்தையின் ஊக்குவிப்பும், உற்சாகமும் அவர்களுக்கு பெருங் கொடையாய் அமைந்தது. புதியகத்தோலிக்கரின் வருகையால் இம்முறை ஆலயம் நிறைந்து பொலிவு கண்டது. எத்தனை சபை தோன்றினும் மக்கள் ஒரு நாள் உண்மை வழியை அறிந்து அதை நாடுவார்கள்என்பதுகப்பன் புலத்து மக்கள் ஊடாக தெளிவாகிற்று.

அ. றஞ்சிதகுமார்
உரும்பிராய்.

## யாகப்பர் ஆலய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்குறிக்கோளை அடைய பலவேறுபட்ட பத்துப் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தபசுகாலத்தின் 3ஆம் கிழமை இந்த ஞான ஒடுக்க நிகழ்ச்சிகள் முடிவுறும்.

## ஆன்மாவுக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமை, தாழ்ச்சி, இரக்கம் என்ற கிறிஸ்தவப் பண்புகளும் நாளாந்தம் வளர்ந்து வருவதை உணரக்கூடியதாய் இருக்கின்றது.

எவ்வாறு நிறையுணவானது உடலுக்கு போஷாக்கு அளிக்கின்றதோ, அவ்வாறே தகுந்த ஆயத்தத்தோடு நாம் பெறும் நற்கருணை ஆன்மாவுக்கு 'டானிக்' ஆவதோடு மட்டுமல்லாமல், விண்ணக வாழ்வின் முன் சுவையாகவும் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
| 16 | எம் வாழ்வின் வழி யேசு |

காவலன் கண்மணிகளே!

கண்மணிகளில் பாசமுள்ள வாசகர்களே!

உங்கள் பார்வையின் ஒளித்திறனை மீண்டும் மட்டிட பார்வை 2ஐ உங்களுக்குத்தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதழ் 8 இலிருந்து 15 வரை மீண்டும் உங்கள் பார்வையைச் செலுத்துங்கள்.

விடைகளை அறிவிக்கும்பொழுது அனுப்புங்கள்.

## காவலன் களஞ்சியம்

### பார்வை 2

(அ) பின்வரும் ஒவ்வொரு தரவையும் கொண்டுள்ள மகிடத்தை எழுதுக.

1. ............... இவ்வாண்டு அவ்வாலயம் அமைக்கப்பட்டு 125 ஆவது ஆண்டு நிறைவாகும்.
2. ............... வைபவ ரீதியாக பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ...............
3. ............... தடம்புரண்டு தவறி விழாதவண்ணம் தளர் நடை பயின்ற குழந்தை போல ............
4. ............ ஒரு குழுவானது மற்றைய குழுவை ஒரு சடப் பொருளாகக் குறைத்து மதிப்பிட ............
5. நீங்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுபவர்கள்.........
6. ............ இப்போது உனது அழுகை ஏற்புடையது.........
7. அப்பாவி பொதுமக்களான அகதிகளின் பரிதாபமான கொலை ...............
8. ............ பெரியோர்கள் அடைந்து அனுபவிக்கும் உயரிய ஸ்தானங்கள் ............
9. ............ அடுத்துவரும் மூன்றாண்டுகாலம் (1997, 1998, 1999) மீட்பர் கிறிஸ்துவின் .........
10. "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பது பழமொழியானால் ............

பார்வை 2 தொடரும். பார்க்கத் தவறாதீர்,

பார்வை கூர்மையாயின் அறிவு ஒளி வீசும்.

அன்பின், அன்பு விழி,

---

விண்ணக வாழ்வின்

31ஆம் நாள் 3ஆம் ஆண்டு



செபஸ்ரியாம்பிள்ளை சிங்கராசா

மலர்வு 17-07-1917 உதிர்வு 20-07-1995



சிங்கராசா றோசம்மா

மலர்வு 01-08-1920 உதிர்வு 03-11-1991

"உயிர்ப்பும் உயிரும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் 19-08-1995 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சென். யூட்ஸ் அவனியு
அரியாலை.

இவர்களின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

A/33/95

## விசுவாச வாழ்வு

ஒரு வீட்டிற்கு அடிக்கல் எவ்வாறு முக்கியமானதோ அவ்வாறே திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு விசுவாசம் வாழ்க்கை எனும் கட்டிடத்திற்கு ஒரு மூலைக்கல் போன்றதாகும். கடவுள் எங்களைப் படைத்தார். எங்களை ஒரு முழு மனிதனாகப் படைத்தார். அவரின் சாயலாக மனித உருவில் படைத்தார். அதனால் அவருக்கு நாம் என்றும் நன்றி கூறவேண்டும். அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் விசுவாசம் யேசுக் கிறிஸ்துவில் தங்கியிருக்க வேண்டும். நாம் எங்கு சென்றாலும் அவரில் விசுவாசம் கொண்டவர்களாக செல்ல வேண்டும். எப்பொழுதும் அவர் எம்மைக் கைவிட மாட்டார்.

இவ்வாறே யேசு எமக்கு விசுவாசம் பற்றிய உவமை கூறுகிறார். நான் சொல்வதைச் செய்யாமல் ஆண்டவரே ஆண்டவரே என்று என்னை நீங்கள் அழைப்பான் ஏன்? என்னிடம் வந்து என்னில் விசுவாசம் கொண்டு என் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவன் எவனும் யாருக்கு ஒப்பாவான் என்று உங்களுக்கு கூறுகிறேன். அவன் ஆழத் தோண்டி, பாறையின் மீது அடித்தளம் அமைத்து வீடு கட்டுகிறவனுக்கு ஒப்பாவான். ஆறு பெருக்கெடுத்தது. வீட்டின் மீது மோதியது. அதை அசைக்கமுடியாமல்போயிற்று. ஏனெனில் நன்றாக கட்டியிருந்தது. ஆனால், என்னில் விசுவாசம் கொண்டு என் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்காதவன் அடித்தளம் இல்லாமல் மணல் மீது வீடு கட்டியவனுக்கு ஒப்பாவான். ஆறு அதன் மீது மோதியது. அது இடிந்து விழுந்தது. அவ் வீட்டிற்கு பெரும் அழிவு ஏற்பட்டது. (லூக். 6: 46 — 49) எனவே நாம் மணல் மீது கட்டிய வீட்டைப் போல் வாழாது பாறையின் மீது கட்டிய வீட்டைப்போல் கிறிஸ்துவில் ஆழமான விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டவர்களாக வாழ வேண்டும்.

● அ. பிரான்சிஸ் மனோகரன்
அமல அன்னை அன்பகம்,
சிறுவர் இல்லம், அரியாலை.

## புலிகளை......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு உலகிலிருந்து வந்தவர்களல்ல. அவர்கள் வடக்குக் கிழக்கு மக்களின் சொந்தப் பிள்ளைகள். அவர்களின் மகன்மாரும் மகள்மாருமே அவர்கள்.

அவர்களை மக்களிடமிருந்து பிரிக்க முடியாது. இவர்கள் இன்னொரு இனத்தின் உரிமையைப் பறிக்க போரிடவில்லை. எம்மை சுதந்திரமாக வாழ விடுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

நாளைகூட இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறினால் இங்கு அமைதி ஏற்படும்."

அடிகளார் பிபிஸிக்கு வழங்கிய பேட்டி கடந்த 09-08-95 புதன் அன்று பிபிஸி தமிழோசையில் ஒலிபரப்பப்பட்டது.

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-22

## மாக்சி மில்லியன் கொல்பே ஒரு குடும்பஸ்தவர்க்காக தன்னுயிர் ஈந்தவர்

இரண்டாம் உலகப் போரில் 40 இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட ஆஸ்விட்ஸ், ஸர்க்கநாப் என்னும் இடங்களுக்குச் சென்றார். இங்கு பாப்பரசர் வந்தவுடன் மயான அமைதி நிலவியது. இங்கு அமைக்கப்பட்ட பலிப்பீடமும் பழையவரலாற்றை நினைவு படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. நடுவில் சிலுவைமரம்நடப்பட்டிருந்தது. சிலுவை முட்கம்பியால்சுற்றி அடைக்கப்பட்டிருந்தது. சிறைக்கைதியின் உடைவடிவில் தொங்கிய கொடியில் 16670 என்ற எண் மிகப்பெரிய எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

இதுதான் முத்திப்பேறு பெற்ற மாக்சி மில்லியன் கொல்பேயின் எண். முத்திப் பேறு பெற்ற மாக்சிமில்லியன் கொல்பே என்ற பிரான்சிஸ்கன் சபைக் குரு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒரு குடும்பத் தலைவனுக்குப்பதிலாக தம்மைக் கொல்லும்படி அர்ப்பணித்து கொல்லப்பட்டவர்.

அங்கு நின்று தான் "போர் என்ற பேச்சுக்கே இனி இடமிருக்காது. நாடுகளின் தன்னுரிமையையும், தனி மனிதனின் அடிப்படை உரிமைகளையும் யாவரும் மதித்து நடக்க வேண்டும்... வீரமுழக்கம் செய்தார்.

இந்த முகாமில் சித்திரவதை செய்யப்பட்டு உயிருடன் திரும்பிய 150 குருக்களுடன் பாப்பரசர் திருப்பலி நிறைவேற்றினார். போலந்து நாட்டின் கொடியையும், கொல்பே சிந்திய இரத்தத்தையும் குறிப்பதாய் சிவப்பு வெள்ளை நிற பூசை உடுப்பை குருக்கள் அணிந்திருந்தனர்.

பலர் போர்க்கைதிகளின் ஆடைகளில் வந்து செத்து மடிந்த மக்களை நினைவு படுத்தினர். ஆறு இலட்சம் மக்கள் கலந்துகொண்ட அக் கூட்டத்தில் சோகமே உருவாக உணர்ச்சி மயமாக நின்றார்.

30 ஆண்டுகளுக்கு முன் பிணவாடை வீசி அபயக் குரல்கள் கேட்ட இடம் 40 இலட்ச யூதர்களும் கிறிஸ்தவர்களும் மடியக் காரணமாய் இருந்த இடம்.

அவரின் உணர்ச்சி பூர்வமான உரை அனைவரையும் மனமுருக்கியது. "...என் இளமைக்காலத்தில் நான் ஓடி ஆடித் திரியவில்லை. நான் இந்த மண்ணில் ஒடுக்கப்பட்டிருந்தேன். இந்த மண்ணில் மனிதருக்கு இழைக்கப்பட்ட அநீதிபோல் எந்த மண்ணிலும் இழைக்கப்படவில்லை. ஆனால் இன்று இதே மண்ணில் கிறிஸ்துவிற்கு கிடைத்த பெருமையை வேறு எந்த மண்ணும் பெற்றுத் தரவில்லை..."

போரின் விளைவாக பல கட்டிடங்கள் அழிந்த நிலையில் காணப்படுவதை சுட்டிக் காட்டி "அடிமைத் தனத்தின் அக்கிரமங்களின் சின்னங்களாக இவை இருக்கின்றன..." என்றார்.


"...வரலாற்றில் பல்வேறு போர்களைச் சந்தித்த போலந்து இன்றைய உலகிலும் வேறுவிதமான போர்களைச் சந்திக்க நேருடுகிறது... ஆதலால் நம்முன்னோர்களான 6ஆம் சின்னப்பர், 23ஆம் அருளப்பர் இவர்களின் அடிச்சுவட்டில் வரும் நானும் கூறுகிறேன். எத்தகைய போரும் வேண்டாம்..." கம்யூனிச கொள்கைகளைத் திணிக்கும் அரசிற்கு இவ்வசனங்கள் பெரும் சவாலாகவே அமைந்தன.

போலந்தை விட்டுப் பிரிவது அவருக்குப் பெரிய கடினமான ஒன்றாகவே இருந்தது.

(வளரும்)

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு

மலர்வு 14 ● 01 ● 1934



உதிர்வு 23 ● 07 ● 1995

J. M. T. அன்ரனி நவரட்ணம்
(யாழ் மரியன்னை பேராலய தொண்டர்)

உத்தானமும் உயிரும் நானே என்றுரைத்த இயேசுவே!
—உமது அடியானை என்றும் இறைவனின் மகிமையில் இன்புற்று வாழ வைத்தருளும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக யாழ். பேராலயத்தில், 22-08-95 மு. ப. 11-00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

3/7, செல்வின் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்,
சோதரர், பெறாமக்கள்,
மருமக்கள், நண்பர்கள்.

A/32/95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர் ஆணைக்குழு**

அறிமுகப்படுத்துகின்றோம்: 1

## கரவை கத்தோலிக்க இளைஞர் மன்றம்

ஆரம்பம்: 27 – 12 – 1994
தலைவர்: செல்வன் நீக்கிலஸ் குமார்
அங்கத்தவர் தொகை: 24
விலாசம்; புனித அந்தோனியார் ஆலயம், கரவெட்டி

விருதுவாக்கு: ''நன்மை செய்வதில் மனம் தளர வேண்டாம்''
(2 தெச. 3: 13)

செயற்பாடுகள்

* மாதமொருமுறை விவிலிய வழிபாடு செய்து செபத்தில் ஒன்றித்தல்.
* ஆலய வளவுகளிலும், பொது இடங்களிலும் சிரமதானப் பணிகளில் ஈடுபடல்.
* போர் அனர்த்தங்களால் அல்லலுறும் மக்களின் துயர் குறைக்க உடுதுணி, உணவு, பணம் சேகரித்துக் கொடுத்தல்.
* திருநாட்களை சிறப்பிக்க கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடாத்துதல்.
* வழிபாடுகளில் இயன்றளவு பங்குபற்றல்.
* பங்குத்தந்தைக்கும், பெற்றோர் பெரியோருக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் போன்றன.

கரவை கத்தோலிக்க இளைஞர் மன்றத்தினரே! உங்கள் மன்ற செயற்பாடுகள் நிச்சயம் பயனுள்ளவையே, உங்கள் விருது வாக்கை மறக்காமல் நன்மை செய்வதில் மனம் தளராமல் இருக்க இறைவனின் உதவியோடு தொடர்ந்து செயற்படுங்கள். செபத்தில் ஒன்றிப்பது உங்கள் முதற்பணியாக இருக்கட்டும். உங்களுக்கு பக்கபலமாக இதோ நாம் இருக்கின்றோம்.

இளைஞர் மன்றங்களே! உங்கள் மன்றங்களைப் பற்றியும் எங்களுக்கு எழுதுங்கள். காலக்கிரமத்தில் நிச்சயம் பிரசுரிப்போம்.

இவை வெறும் பிரசுரத்துக்காக அல்ல. ஒருவர் ஒருவரை அறிந்துகொள்ள, ஒருவர் ஒருவருக்கு கை கொடுக்க, ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ள, இளைஞர் கரங்கள் இணையட்டும்!

இறைவன் அரசு வளரட்டும்!!

— யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு —

## உயிருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாரின் தலைமையில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில், அருள்திரு S. H. ஜெபநேசன், தென்னிந்திய திருச்சபை சார்ந்த வண. பிதா ஆனல்ட், வண. பிதா தர்மகுலசிங்கம், நல்லை ஆதின முதல்வர், நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் குருக்கள், திருமதி மேரி நாயகி மரியதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

## விடுதலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறையுரை அருள்திரு J. E. ஜெயசீலன் அடிகளாரால் வழங்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய ஜெபநேசன் அடிகளார், இலங்கை அரசு வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நடத்தும் போர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அல்ல, மாறாக தமிழ் மக்களுக்கு எதிராகவே நடாத்துகின்றது என்று கூறினார்.

## நீதி- நியாயத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் S. ஜெபநேசன் தமது திருச்சபையுறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையரசு ஞானத்துடனும் அன்புடனும் தமிழ் மக்களை நடாத்த வேண்டுமென்றும், போரின் அனர்த்தங்கள் நீங்கி நாட்டு மக்கள் குதூகலத்துடன் வாழக்கூடிய சூழ்நிலை விரைவில் ஏற்பட வேண்டுமென்றும் இறைவனை வேண்டுவோமாக என்று மேலும் ஆயர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

## நவாலி தேவால..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைத்தேன். இதுவரை அக்கடிதம் உங்களுக்கு கிடைக்கவில்லை என்பது குறித்து நான் ஆச்சரியமடைகிறேன். அதே சமயம் கடிதங்களை கொழும்பில் உள்ள பாப்பரசரின் பிரதிநிதிக்கும், சிறிலங்கா கத்தோலிக்க ஆயர்கள் சபைக்கும் அனுப்பினேன். இக் கடிதம் கொழும்பு பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது,

தேவாலயத்திலும் அதன் வளாகத்தினுள்ளும் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதே எமது அக்கறை. தேவாலய பங்குக்குருவின் வீடும் சேதமுற்றதை நான் குறிப்பிட்டிருந்தேன். ஜீலை 9 ஆம் திகதி மாலை 4.45 மணியளவில் புக்காரா விமானத்திலிருந்து வீசிய 'கிளஸ்டர்' குண்டினால் இச்சேதம் ஏற்பட்டது.

நான் அங்கு நேரில் சென்றபோது ஆலயக்கூரை சேதமடைந்திருந்ததையும் யன்னல்கள், கதவுகள் பிடுங்கி எறியப்பட்டிருந்ததையும் தரையில் இரத்தக் கறைகளையும் கண்டேன். இரத்தக்கறை படிந்த உடுதுணிகளும் சிதறிக்கிடந்தன, இதுவரை கிடைத்த எண்ணிக்கைப்படி இங்கு 117 பேர் பலியாகியுள்ளனர்.

இக்கடிதத்துடன் சம்பவ தினத்திற்கு மறுநாள் நான் உங்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் இணைத்துள்ளேன்.

குடாநாட்டில் தொடர்ந்து அரசபடைகள் நடத்தும் தாக்குதல்களால் பொதுமக்கள் பலியாவதுடன், அவர்கள் அரசு மீது வெறுப்புக் கொள்ளவும் வைக்கின்றது, இராணுவத் தீர்வை விடுத்து அரசியல் ரீதியான தீர்வுக்கு முயற்சிக்குமாறு உங்களை மீண்டும் நான் கோருகின்றேன்.

## பேராலய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழா வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டு செவ்வாய் 15ஆம் திகதி அன்று முடிவு பெற்றது. திருவிழாத் திருப்பலி யாழ் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவ் விழாவுக்கு மக்களை ஆயத்தம் செய்ய பேராலயப் பங்குத் தந்தை அன்ரன் இராசநாயகம் அடிகளார் ஒழுங்கு செய்த நவநாள் ஆராதனைகளை மறையுரைஞர் F. A. தேவராஜா o.m.i. அடிகளார் சிறப்பு மறையுரை ஆற்றி நெறிப்படுத்தினார்.

யாழ் மறைக்கோட்டத்தில்

## ஞாயிறு திருப்பலிகள்

★ சேர்க்கை ● திருத்தம்.

| | நேரம் | ஆலயங்கள் |
|---|---|---|
| ★ | காலை | 7.15 - யாழ். அடைக்கல மாதா ஆலயம் |
| | | - புனித திரேசாள் ஆலயம், சுண்டிக்குழி |
| ● | காலை | 7.30 - புனித அன்னம்மாள் ஆலயம், பண்டியன்தாழ்வு |
| | | - கர்த்தர் ஆலயம், மணியன் தோட்டம் |
| | | - இறையன்னை ஆலயம், கொட்டடி. |
| ★ | காலை | 8.00- புனித செபஸ்தியார் ஆலயம், உதயபுரம் |

செயலர்
யாழ். மறைக்கோட்டம்.




## பாதுகாவலன் சிறப்பு நாள்

### முன்னோடி ஆயத்த நிகழ்வுகள்

தொடர்பு சாதன ஆணைக் குழுவின் அனுசரணையுடன் பாதுகாவலன் சிறப்பு நாளைக் கொண்டாட ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தங்கள் பங்கில் சிறப்பு நாள் நிகழ்வுகளை செயல்படுத்த தங்களின் முயற்சி மூலம் பரவலான கருத்துப் பரிமாற்றங்களிலும், போட்டிகளிலும் பங்கு மக்கள் பங்கேற்று நற்செய்தி விழுமியங்களைப் பரப்பிட, எழுத்துலக ஆர்வத்தை ஏற்படுத்த, ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் பாதுகாவலன் சிறப்பு நாள் சிறப்புற தங்களுடன் தொடர்பு கொள்வதில் மகிழ்வடைகிறோம்.

சகல போட்டிகளுக்குமான கரு:

**"சமாதானத்தை நோக்கி"**
(கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டதாக)

| | |
|---|---|
| சிறு கதைப் போட்டி: | நாலுபக்க புள்ஸ்காப்பேப்பருக்குமேற் படாமல் ஒரு பக்கத்தில் மாத்திரம். |
| மணிக்கதைப் போட்டி: | ஒரு பக்கத்தில் மாத்திரம். |
| கவிதைப் போட்டி: | 16 வரிகளுக்கு மேற்படாமல். |
| கட்டுரை: | 3 பக்க புஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம். |
| ஓவியம்: | அளவு ஒரு முழு பிரிஸ்டல்போட் அளவு, கொண்டது, |

**போட்டி இறுதி நாள் 25 - 09 - 95**

இப் போட்டிக்கான பரிசுகள் பங்கு மட்டத்தில் நடைபெறும். பாதுகாவலன் சிறப்பு நாள் நிகழ்வில் பரிசளித்துக் கௌரவிக்கப்படுவர்.

தெரிவாகும் 1 — 3 இடமும் மாவட்டத்தின் தெரிவுக்கு பரிசீலிக்கப்படும்.

* போட்டியில் பங்கேற்கும் சகலரும் தங்கள் படைப்புக்களை பங்குத்தந்தைக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் [illegible] பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org